

மியாட் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மோகன்தாசுக்கு, மேற்கு வங்கத்தில் உள்ள கல்யாணி மருத்துவ பல்கலையின் கவுரவ டாக்டர் பட்டத்தை அம்மாநில ஆளுநர் எம்.கே.நாராயணன் வழங்கினார். அருகில் துணை வேந்தர் திலிப்குமார். மேம்பாட்டு அதிகாரி கௌசிக் முகர்ஜி.

## மியாட் மருத்துவமனை

# டாக்டர் மோகன்தாசுக்கு கவுரவ டாக்டர் பட்டம்

### மேற்கு வங்க பல்கலை வழங்கியது

சென்னை, ஆக.25: மேற்கு வங்காள மாநிலத்தின் கல்யாணி பல்கலைக்கழக சிறப்பு பட்டமளிப்பு விழா, மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது. பல்கலை துணை வேந்தர் திலீப்குமார் மொகந்தா தலைமை தாங்கினார். பதிவாளர் உத்பல் பட்டாச்சார்யா முன்னிலை வகித்தார்.

மேற்கு வங்க மாநில ஆளுநரும் பல்கலை வேந்தருமான எம்.கே.நாராயணன், மியாட் மருத்துவமனை நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குனர் பேராசிரியர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாசுக்கு கவுரவ டாக்டர் பட்டத்தை வழங்கினார்.

விழாவில் ஆளுநர் எம்.கே.நாராயணன் பேசுகையில், "உலக அளவில் இந்தியா, சினாவில் மருத்துவ சிகிச்சை சிறப்பாக உள்ளது. குறிப்பாக சென்னையில் மருத்துவ சிகிச்சை சிறந்த முறையில் அளிக்கப்படுகிறது. டாக்டர் மோகன்தாசுக்கு டாக்டர் பட்டம் வழங்குவதை பெருமையாக நினைக்கிறேன். அவர் ஒரு மருத்துவ உலகம். அவருடைய சாதனைகள் தொடர வேண்டும்" என்றார்.

டாக்டர் மோகன்தாஸ் பேசுகையில், மியாட் மருத்துவமனை 50 படுக்கைகள் மற்றும் ஒரு சிறப்பு பிரிவுடன் சிறியதாக தொடங்கப்பட்டது.

தற்போது ஆயிரம் படுக்கைகள் மற்றும் 47 சிறப்பு பிரிவுகளுடன் வெற்றிகரமாக செயல்படுகிறது. உலகிலேயே குறைந்த செலவில் தரமான மருத்துவ சிகிச்சையை மியாட் மருத்துவமனை அளிக்கிறது" என்றார்.

மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் ப்ரித்வீ மோகன்தாஸ் மற்றும் டாக்டர்கள் கலந்து கொண்டனர்.